[1970 ஆகஸ்ட் 27

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : உரக்கடன்களைத் தள்ளுபடி செய்கிற உத்தேசம் அரசாங்கத்திற்கு இல்லை. ஆனால் உறுப்பினர் அவர்கள் சொல்கிறமாதிரி திருமயம், கொளத்தூர், ஆலங்குடி, போன்ற புதுக்கோட்டையைச் சேர்ந்த இடங்களில் வரட்சி உச்சகட்டத்தில் இருந்தது உண்மை. அந்த நிலையிலும் இந்த மாதிரிக் கடன்களைத் தள்ளுபடி செய்யமுடியாது. ஆனால் வரட்சி ஏற்பட்ட காரணத்தினால் விளைச்சல் இல்லை என்ற காரணத்தினால் கூடுமானவரையில் எந்தெந்த இடங்களில் அவசியமோ அந்தந்த இடங்களில் நிலவரி தள்ளுபடி செய்வதற்கு அரசு நடவடிக்கைகள் எடுக்கும். ஆனால் சமீபத்தில் ஒரு ஆறு மாத காலமாக இந்த உரக் கடன்களை ஒத்திவைப்பதற்கு அரசு உத்தரவிட்டிருக்கிறது.

விராச்சிலை பேருந்து நிலையத்தில் ஆக்கிரமிப்பு

* 67 வினா—**புலவர் பொ. பொன்னம்பலம்** : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதியிலுள்ள விராச்சிலையில் பேருந்துகள் நிற்குமிடத்தில், பொதுமக்களுக்கும், பேருந்துப் போக்குவரத்திற்கும் இடையூறு செய்யும் வகையில் 1968-69-ல் ஆக்கிரமிப்பு செய்து கடைகள் வைத்திருப்பதை அகற்ற திருமயம் வட்டத் தாசில்தாரால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : குறிப்பிட்ட ஆக்கிரமிப்பை அகற்ற திருமயம் வட்டத் தாசில்தார் தக்க நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 68 பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

வேட்டாங்குளம் அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

* 69 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன்** : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தாலுக்கா வேட்டாங்குளம் கிராமத்திலுள்ள அரிசன மக்கள் வீட்டுமனைக் கோரி ஏதேனும் விண்ணப்பம் எழுதியுள்ளார்களா ?

(இ) ஆம் எனில், எந்த தேதியில்? எத்தனை பேர்கள் ?

(உ) அதன் பேரில் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) 11—8—1969 ; 53 பேர்கள்.

(உ) வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவரின் செயற்குறிப்புக்கு, சமூக நலத்துறையின் 24—1—1970 நாளிட்ட 190—ம் எண் அரசு ஆணையில், அரசு ஏற்பளித்தது. நிலக் கையகப்